Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 27 இதழ் - 4 ஏப்ரல் 2014



அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே
பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை
அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம்.
(எபேசியர் 2 : 18)

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !

# பதினேழாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,

ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து, சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 5,6, 7, - 2014 ( திங்கள், செவ்வாய், புதன் )**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 250 /-

சிறியவர்கள் ரூ. 150 /-

உணவும், தங்குமிடமும் இலவசம்

### ஆசானின் அறிவுரையிலே....


1. ஆசிரியர் உரை............................1
2. ஏன் நாங்கள் நியாயப்பிரமாணத்தின் .... 9
3. பெண்கள் பகுதி............................14
4. வாலிபர் பகுதி............................17
5. சிறுவர் பகுதி............................20
6. நிஜத்தைப் பேசாதே ..................22
7. தேவனுடைய கரத்தில் வைத்து ...........25
8. எல்லா சபையும் ஒன்று தானா........................28
9. விசுவாசத்தை ஊன்றக் கட்டுங்கள்.........30


### முகாமின் சிறப்பம்சங்கள்

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமுகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.

★ தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் வல்லமையான தேவச் செய்திகள்.

★ தேவ பக்தியைத் தூண்டும் ஆவிக்குரிய பாடல்கள்.

★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.

★ பெண்கள், வாலிபர்கள், வாலிப பெண்களுக்கென தனித்தனி வகுப்புகள்.

★ சிறு பிள்ளைகளுக்கு சிறப்பு வகுப்புகள். (போட்டியும், பரிசுகளும் உண்டு)

★ **பெண்களுக்கு தனி இடவசதி.**

★ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு கட்டணத்துடன் கூடிய தனித்தனி அறைகள்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 APRIL - 2014 Issue - 4**


ஆசிரியர் உரை

# பவுலின் ரோமப் பயணத்திலிருந்து ...

பயணங்கள் மூன்று வகைப்படும். அவை மண் மார்க்கம், விண்மார்க்கம், நீர் மார்க்கம் ஆகியன. இம்மூவகைப் பயணத்தில், ஏதாவதொன்றில் கூட அனுபவமில்லாதவன் இப்பூமியில் இருக்க முடியாது. ஏனெனில், எல்லோரும் எப்போதும் ஏதாவதொரு மார்க்கப் பயணத்தை மேற்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், மேற் கொள்ளப்படும் அனைத்து பயணங்களும் ஒருவனுடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறாமல், சில பயணங்கள் என்றும் நினைவில் நிற்கக் கூடியவைகளாக அமைந்துவிடும். அதற்குக் காரணங்கள் பல இருக்க முடியும். ஒருவேளை அப்பயணத்தின் மூலம் அடைந்த நன்மைகளோ, பெற்ற சிறப்புகளோ அல்லது அனுபவித்த துன்பங்களோ, பட்ட நஷ்டங் களோ, நேர்ந்த அவலங்களோ அதற்குக் காரணமாக இருக்கலாம். எப்படியோ ஓர் உறுதியான இடத்தை அவை வாழ்வில் பிடித்துவிடும்.

இவ்வகையில், பவுல் மேற்கொண்ட பிரயாணங்களை நாம் கவனித்துப் பார்த்தால், ஒருவேளை அவர் தனது ஊழியப்பாதையில், மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டு, பல பயண அனுபவங் களைப் பெற்றிருந்தாலும், அவரின் ரோமப் பயணம் தனிச் சிறப்புக் குரியதாகவே உள்ளது. ஏனைய பெரும்பாலான பயணங்களைப் போல இதுவும் ஓர் நீர் மார்க்கப் பயணம் தான். இம்மார்க்கத்திற்கே உரிய சில பொதுவான சிரமங்கள் இதிலும் இருந்ததும் உண்மையே. இருப்பினும் அம்மூன்றில் கிடைக்காத சில அனுபவங்கள் ரோமப் பயணத்தில்

அவருக்கு கிடைத்தே உள்ளது. அதற்கான, பல காரணங்களில் அவர் ஒரு விசாரணைக் கைதியாக அப்பிரயாணத்தில் அழைத்துச் செல்லப் பட்டதும் ஒன்று. இப்பயணம் பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் 27,28 ஆகிய அதிகாரங்களில் நாம் விபரமாகக் காணலாம்.

இதிலிருந்து சில பாடங்களை நாம் கற்றுக்கொள்வதற்கு முன்பாக இப்பயணத்தின் பின்னணியைக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், கடுமையான எச்சரிப்புக்கும், பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் [21:11-13] எருசலேம் பயணத்தை மேற் கொண்டு, அங்கு சுமார் ஒரு வார காலம் தங்கி, நசரேயனாகிய இயேசு, மரித்தோரிலிருந்து எழுந்த தேவனுடைய குமாரனென்று பயமின்றி பலருக்கும் பிரசங்கித்தபடியால், எதிர்பார்த்தபடியே எதிர்ப்புகள் ஏராளமாய்க் கிளம்பி காவலில் வைக்கப்பட்டான். அப். 22:23 அதிகாரங்களில் இது குறித்து நாம் படிக்கலாம்.

எப்படியும் பவுலைக் கொலை செய்ய வேண்டுமென்று தாங்கள் தீட்டின திட்டம் தவிடு பொடியானதால் [23:21-24] சதியால் செய்ய முடியாததைச் சட்டத்தால் சாதித்துப் பார்க்கலாம் என்று எண்ணி, வாக்குத் திறனோடு வாதத் திறமையும் சேர்த்துப் பெற்றிருந்த தெர்த்துல்லு [24:1] என்ற வழக்கறிஞனை கூலிக்கு அமர்த்தி வந்து, அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை ஆளுநர் பேலிக்ஸ் முன்பாக லாவகமாக எடுத்து வைத்தனர். ஆனால், அவர்களின் எல்லாப் பொய் குற்றச்சாட்டுகளுக்கும் சரியான பதிலடி கொடுத்து, சாதுரியமாகப் பவுல் வழக்காடினதைக் கண்ட பேலிக்ஸ், யூத மார்க்கத்தின் காரியங்களைத் தான் திட்டமாய் அறிந்திருந்தபடியால், பவுலுக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்க முடியாமல் திணறி, சேனாபதி லீசியா வரும்வரை வழக்கை ஒத்திவைப்பதென்று முடிவெடுத்து, அதுவரை பவுலைக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பித்தான் [24:10-23] இவ்வழக்கு பேலிக்ஸ்க்குப் பிறகு, பெஸ்துவிடம் வந்து, விருந்தாளியாக வந்த அகிரிப்பா ராஜாவின் முன்னிலைக்கும் கொண்டு செல்லப்பட்டதை நாமறிவோம் [அதி. 25: 26].

அகிரிப்பா ராஜா, பவுலைக் குற்றமற்றவன் என்று விசாரணையில் கண்டு, இந்த மனிதன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை செய்யலாம் என்று சிபாரிசு செய்தான். ஆனால், ஆளுநர் பெஸ்துவின் கயமையைக் கண்டு கொண்ட [25:9] பவுல், இராயனுக்கு அபயமிட்டிருந்தபடியால், ரோமுக்குச் செல்ல நேர்ந்தது. இங்கே நாம் ஒன்றை கவனிப்பது நல்லது. வழக்கின் தன்மை காரண மாகவும், பெஸ்துவின் கயமையினிமித்தமும், இன்னும் பவுலின் வேண்டுகோளினிமித்தமும், ரோமுக்குச் செல்ல நேர்ந்தது என்பதைக் காட்டிலும், தேவசித்தம் நிறைவேறும்படியாகவே அப்படி நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படியெனில், எருசலேமில் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பவுல் விசாரிக்கப்பட்ட

அன்றிரவே இப்படியாக பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது **"....பவுலே, திடன் கொள், நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல, ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும் " என்றார்** [23:11]. ஆகவே, ஒரு காரியத்தின் போக்கு எப்படித் திசை மாறிப்போனாலும், ஏற்ற, இறக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும், இறுதியில் தேவச் சித்தம் நடந்தே தீரும்.

சரி, அப்போஸ்தலர் இருபத்தோழம் அதிகாரத்தின் ஆரம்பத்தி லிருந்து பவுலின் ரோமப் பயணம் தொடங்குகிறது. அகஸ்து பட்டாளத்தை சேர்ந்த யூலியு என்ற நூற்றுக்கதிபதியின் தலைமையின் கீழ் பவுலும், அரிஸ்தர்க்கும், வைத்தியனாகிய லூக்காவும், பவுலின் சக கைதிகளும் பயணத்தை மேற்கொண்டனர். மாரிக்காலத்துக்கு முன்பாகவே, தங்கள் முழுப்பயணத்தையும் முடித்துவிட வேண்டு மென்பது ஆரம்ப திட்டம். ஏனெனில், மாரிக்காலத்தில், மத்திய தரைக் கடலின் இப்பகுதி, பயணத்திற்கு ஏற்றதாக இராமல் தாறுமாறாகப் பொங்கி எழும். அச்சமயத்தில் பிரயாணிப்பது மிகுந்த ஆபத்தானது. ஆகவேதான், அப்போஸ்தலன் பவுல், ரோமச் சிறைச்சாலையிலிருந்து, தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் துரோவா பட்டணத் திலிருக்கிற தனது மேலங்கியையும், புத்தகங்களையும், தோல் சுருள் களையும் எடுத்துக்கொண்டு, மாரிக்காலத்துக்கு முன்பாக வரும்படி ஜாக்கிரதைப்படு என்று கூறியுள்ளார் [4:13,21].

இப்படி, ஆபத்துக்களை அதிகமாக உள்ளடக்கிய கடல் பிரயாணத்தை அவர்கள் செசரியாவிலிருந்து தொடங்கி, அதிரமித்தியம் போகும் கப்பலில் முதலில் ஏறி, வெகு சிரமங்களைக் கடந்து, ஒரு வகையாக நல்ல துறைமுகம் என்ற இடத்திற்கு வந்து சேர்வதற்குள் ளாகவே போதும் போதுமென்றானதோடல்லாமல், வெகுகாலமுமாகி விட்டது [27:8].

இக்கட்டத்தில் பவுல், இனிப் பயணத்தைத் தொடர்வது உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பற்றது என்று எச்சரித்தான் [27:10]. ஆனால், இவன் ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு, கப்பலில் இருந்த **பெரும்பாலானவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக,** அநேகரின் ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டு பயணம் தொடர்ந்தது. [27:12].

அச்சமயத்தில், அநேகரின் ஆலோசனை தான் நியாயமானது என்று நினைக்குமளவுக்கு நிலைமையும் சாதகமாகி, இதமான **தென்றல் மெதுவாயடித்தது** [27:13] நல்லவேளை, இந்த மனிதனின் ஆலோசனையை நாம் புறக்கணித்தோம் என்று தங்களுக்குள் பேசவும் செய்தனர். ஆனால், என்ன நடந்தது தெரியுமா? கொஞ்ச நேரத்துக் குள்ளே, " யூரோக்கிலிதோன் " என்னும் கடுங்காற்று அடித்து கப்பலைச் சீரழித்தது [14] கப்பலும், காற்றின் போக்கிலே அடித்துச் செல்லப்பட்டது.

கப்பலிலிருந்தவர்களுக்கு, அநேக நாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல் மிகுந்த காற்றும், பெருமழையும்

அடித்துக்கொண்டிருந்தபடியால் இனித் தப்பிப் பிழைப்போமென்கிற நம்பிக்கை முழுமையாக அற்றுப்போயிற்று [27:20]. எல்லோரும் போஜனம் பண்ணாமல், பல நாள் பட்டினி கிடப்பதைக் கண்ட பவுல், தன் சொல்லைக் கேட்க மறுத்த இவர்கள் சாகட்டும் என நினைக்காமல், அவர்கள் நடுவே நின்று, கடந்த இரவிலே கர்த்தர் தனக்கு வெளிப் படுத்தின அவர்களை திடப்படுத்தி, " எனக்குச் சொல்லப்பட்ட பிரகார மாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் " என்றான் [27:25].

இதன்பிறகு, பவுலின் ரோமப் பயணம் முடிவுக்கு வந்து, தேவனால் திட்டமிடப்பட்டவைகளைச் செய்து முடித்தான் என்று வேத வசனங்களில் நாம் வாசிக்கிறபடியால், இப்பயணத்திற்கு இங்கே தானே முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இதுவரை நாம் பெற்றுக்கொண்ட பயண அனுபவத்திலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியு மென்று முயற்சித்துப் பார்ப்போம்.

## I பெரும்பான்மை பார்ப்பது ஆபத்தானது

பவுலின் கடல் பயணத்தில் நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், பெரும்பான்மை பார்ப்பது, குறிப்பாக தேவன் சம்பந்தப்பட்ட காரியத்தில் பார்ப்பது அழிவுக்கு அழைத்துச் செல்லுமென்பதாகும்.

தங்களது ரோமப் பயணத்தில் மோசம் நேர்ந்து, கிரேத்தா தீவின் ஒதுக்கிலே ஓடி வருத்தத்தோடே லசேயா பட்டணத்துக்கு அருகேயுள்ள நல்ல துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தனர். தாங்கள் மேற்கொண்ட பயணம் எசகு பிசகாகி, நாட்களும் வெகுவாகக் கடந்து போனதால், பவுல் " **....இனிக்கப்பல் யாத்திரை செய்வது பெரும் மோசத்திற்கு ஏதுவாகுமென்று அவர்களை எச்சரித்தான்** " [27:9] ஆனால், நடந்தது என்ன? சரியான சமயத்தில் சொல்லப்பட்ட ஆலோசனை, ஏற்றுக்கொள்ளப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டது. ஆனால், இப்படிப் பட்ட ஆலோசனைகள் பற்றி வேதாகமம், ஞானி சாலமோனைக் கொண்டு, " ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் " [நீதி. 25:11] என்று சொல்லு கிறது. அதுமாத்திரமல்ல, எது நல்லது என்று ஒரு வாக்கெடுப்பும் நடத்தப் பட்டு, மெஜாரிட்டித் தீர்ப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவ மனிதனின் அர்த்தமுள்ள ஆலோசனை பெரும்பான்மை பலத்தால் அடியோடு நிராகரிக்கப்பட்டது.

ஆனால், இந்தப் பெரும்பான்மை பெலத்தால், அதன் தீர்ப்பால், கப்பல் அலைக்கழிக்கப்பட்டு, பெரும் சேதத்துக்கு உள்ளாயிற்று என்பது நமக்குத் தெரிந்ததே. இதே நிலைதான் இன்றைய கிறிஸ்தவத்திலும் உள்ளது. பெரும்பான்மை என்ற தேவ விரோதச் செயல், கிறிஸ்தவத்தின் ஆன்மீக வாழ்க்கையை அலைக்கழித்து, பெரும் தீமைக்கு உள்ளாக்கிக் கொண்டுள்ளது. மெய்க் கிறிஸ்தவம் தழைத்து ஓங்காமல், முளைத்த குழிக்குள்ளாகவே வெம்பிக்கிடப்பதற்குக் காரணம் இந்தப் பெரும் பான்மைக் கணக்கு தான். ஆம், கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும்

தங்களுடைய நிலையை பெரும்பான்மையினடிப்படையிலே தான் இன்றைக்கு தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

தங்கள் செயலில், நீதியும் நியாயமும், உண்மையும், வசனங்களின் ஆதாரமும் எந்தளவு இருக்கிறதென்று பாராமல், தாங்கள் செய்கின்ற அதே செயலை அல்லது தங்களின் அதே வழிபாட்டு முறையை எவ்வளவு பேர் செய்கிறார்கள் என்று இரகசியக் கணக்கெடுத்த நமது காரியங்களை இவ்விதம் செய்கின்றனர். ஆனால், தேவனுக்கடுத்த நமது காரியங்களை இவ்விதம் தீர்மானிப்பதற்கு வேதாகமத்தில் ஏதாகிலும் ஆதாரம் உண்டா? சொல்லுங்கள். " **தீமை செய்யத் திரளான ஜனங்களைப் பின்பற்ற வேண்டாமென்று தானே வசனம் சொல்கிறது** " [யாத். 23:2] இந்தப் பெரும்பான்மைப் பித்தால் கிறிஸ்தவ உலகில் வளர்ந்து விட்ட தீமைகள் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?.

வேதாகமத்தில் இல்லாத பொய்யான உபதேசங்களையும், குதர்க்கமான போதனைகளையும் மூலதனமாக வைத்து வியாபாரம் செய்யும் ஆவியின் கூட்டத்தார் ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்யமுடிகிறதே, அது எப்படி? வேத வசனங்களில் வேர் கொள்ளாமலே விசுவாச ஊழியம் என்ற பெயரால், வீதிகளில் உலா வந்து, வீடுகள் தோறும் படு ஜோராக ஏறி இறங்க முடிகிறதே அது எப்படி? மனந்திரும்புதலைப் பற்றியும் ஞானஸ்நானம் பற்றியும், இரட்சிப்பு குறித்தும் தங்கள் பிரசங்கங்களில் ஒரு வார்த்தை கூடப் பேசாமலே, பெரும் பிரசங்கிகள் என்ற பட்டத்தை போகிறபோக்கில் பெற்று விடுகிறார்களே அது எப்படி? சொல்லுங்கள் இவையனைத்தும், இந்தப் பெரும்பான்மை என்ற பாவம் பெற்றெடுத்த வீச்சுக்குட்டிகளே.

அன்பரே, எப்படி கப்பலில் இருந்தவர்களின் பெரும்பான்மை அவர்களை அழிவுக்கு அழைத்துச் சென்றதோ, அதைப் போலவே, நமது ஆன்மீக வாழ்வின் பெரும்பான்மையும் அழிவுக்கே அழைத்துச் செல்லும். ஜாக்கிரதையாயிருப்போம்!.

## II தென்றலைத் தேடி கடுங்காற்றைப் பெற்றுக்கொண்டனர்

இரண்டாவதாக, இந்த ரோமப் பயணம் நமக்கு தரும் பாடம் தேவ ஆலோசனையை நாம் மீறினால் என்ன நடக்குமென்பது.

அநேகரின் ஆலோசனைப்படியே பிரயாணம் தொடர்ந்தபோது, சலனமற்ற கடலும், இதமான தென்றலும் கிடைத்தது. ஆம், அப்பொழுது இந்தப் பெரும்பாலானவர்களுக்கு ஏக குஷி. நல்லவேளை அந்த தேவ மனிதனின் வார்த்தைகளை மீறினோம் என்று பெருமிதப் பட்டு, தங்களின் அடுத்த காரியத்தை வேகமாகச் செய்தனர் [27:13]. ஆனால், கொஞ்ச நேரத்துக்குள்ளே, யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று கப்பலில் மோதியது.

நண்பரே! தேவ மனிதன் மூலமாக வெளிப்பட்ட தேவ ஆலோசனை புறக்கணிக்கப்பட்டு, பெரும்பான்மையினடிப்படையில் காரியமாற்றிய போது சுகமான கடலும், இதமான தென்றலும்

கிடைத்தது உண்மைதான். இல்லையென்று யாரும் சொல்லவில்லை. ஆனால், அடுத்து நடந்தது என்ன? தெரியும் தானே.

நம்முடைய வாழ்க்கையிலும் கூட நாம் தேவனை அலட்சியம் செய்து, அவரின் வார்த்தைகளை விட்டு விலகிச் செல்லும்போது, அதன் ஆரம்பம் இன்பமாகவே இருக்கும். தென்றலைப் போன்ற சுகமான அனுபவங்கள் வலிய வந்து சேரும். இறுதியில், அது கடுங்காற்றாக மாறி நம்மைச் சீரழிக்கும். உதாரணமாக, புகைக்கும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றல் போலிருக்கும். ஆனால், இறுதியில் புற்றுநோய் என்னும் புயல் வரும். சூதாடும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றலாக இருக்கும். பிறகு பெரும் நஷ்டம் என்ற கடுங்காற்று சுழன்று அடிக்கும். விபச்சாரம் செய்யும் ஒருவனுக்கு அதன் ஆரம்பம் தென்றலாகவும், அதனால் வரும் " எய்ட்ஸ் " என்னும் ஆட்கொல்லி நோய் யூரோக்கிலிதோனாக வந்து சேரும்.

இப்படிச் சரீர சீரழிவை ஏற்படுத்தும் இக்கொடுஞ் செயல்களில் மனிதன் விட்டில் பூச்சிகளைப் போல எப்படி வலியச் சென்று சிக்கிக் கொள்கிறானோ அதைப்போலவே, ஆன்மீக வாழ்விலும் நடக்கிறது. ஆம், ஒன்றான மெய்த்தேவனால் ஆன்மீக வாழ்வுக்காகக் கொடுக்கப் பட்டுள்ள தேவ ஆலோசனைகள் பெரும்பான்மை பெலத்தால் பகிரங் கமாக மீறப்படும் பொழுதெல்லாம் பிசாசானவன் சலனமற்ற கடலையும், இதமான தென்றலையும் அந்தத் துணிகரக்காரர்களுக்கு கொடுக்கிறான். ஆம், தேவனுடைய வார்த்தைகளை மீறி நடக்கிற ஒவ்வொருவனுக்கும் அவர்களின் தரத்திற்கும், தேவைக்கும் ஏற்றபடி விதவிமான தென்ற லைக் கொடுத்து, தேவனை விட்டு இழுத்துச் செல்கிறான். ஆம், அற்புதம் என்ற தென்றலையும், அயைாளம் என்ற தென்றலையும், சாட்சி என்ற தென்றலையும், தரிசனம் என்ற தென்றலையும், பெயரும், புகழும் என்ற தென்றலையும், வருமானம் என்ற தென்றலையும், பதவி என்ற தென்றலையும், இன்னும் இது போன்ற அநேக தென்றல்களையும் அவன் வரவழைக்கிறான் உண்மைதானே.

ஆனால், இந்த உலக ஆதாயங்கள் என்றும் சுகமான அனுபவங்கள் உனது ஆன்மீக வாழ்க்கையில் யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றுக்குள் சிக்கவைக்கும் என்பதை மறந்து விடாதே. அப்பொழுது, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை அலைக்கழிக்கப்படும். நீ தேவனற்ற வனாகவும், ஒருவேளை, தேவனை ஆராதித்தாலும், சத்தியத்தின்படி ஆராதிக்காதவனாகவும், மறுமையின் நம்பிக்கையற்றவனாகவும் மாறுவாய். ஆகவே, அருமையானவர்களே, நமது பரம கானானுக்கான பயணத்தில் " **பல தென்றல்களை** " நம்பி நாம் யாரும் மோசம் போக வேண்டாம்.

## III தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்

பவுலின் ரோமப் பயணம் தரும் மூன்றாவது பாடம், எந்நிலைமை யிலும், தேவனிடத்திலும், அவருடைய வார்த்தைகளின் பேரிலும் நம்பிக்கையாயிருப்பது.

கப்பல் யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றில் சிக்கிச் சீரழிந்த போது, எப்படியாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று, கப்பலிலிருந்தவர்கள் பகீதரப் பிரயத்தனம் செய்தனர். அதற்காக, சரக்கு களையும், கப்பலின் தளவாடங்களையும் கூடத் தூக்கி கடலில் எறிந்தனர். [27:18,19]. தங்களுடைய ஆலோசனையின்படி காரியங்கள் நடக்கிறதென்ற களிப்பில் திளைத்திருந்தவர்கள் இப்போது வியர்த்து விறுவிறுக்க, ஆளாளுக்கு இறுதிப் பார்வை பார்த்துக் கொண்டனர். எல்லோருக்கும் " **...இனித் தப்பிப் பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று** " [27:20].

இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தான், ....பவுல் அவர்கள் நடுவிலே நின்று; மனுஷரே, இந்த வருத்தமும், சேதமும் வாராதபடிக்கு என் சொல்லைக் கேட்டு, கிரேத்தா தீவை விட்டு புறப் படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது என்று அவர்களை இலேசாக இடித்துக் காட்டி, மேலும் நோகடிக்க அது சரியான தருணமல்ல என எண்ணி, அவர்களை திடப்படுத்த இவ்விதமாகச் சொன்னான். " எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் " என்று [27:25].

இங்கே பவுல் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்று சொல்வதின் பொருள் என்ன? உலகிலுள்ள பெரும்பாலான மக்கள், தங்களையும் ஓர் ஆன்மீகவாதி என்று காட்டிக் கொள்ள, நானும் தெய்வ நம்பிக்கையுடையவன் என்று ஒப்புக்குச் சொல்கிறார்களே அதுபோலவா? அல்லது தேவ வசனத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு தன்னை தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்று சொல்லிக் கொள்கிறார்களே, அதுபோலவா? அப்படியில்லை யென்றால், பின் எது போல? பவுலின் இந்த வார்த்தைகளுக்கு ஆழமான பொருள் உண்டு, அது என்ன என்று கவனிப்போம்.

ஆம், கடந்த இராத்திரியிலே, தேவனுடைய தூதன் பவுலிடத்தில் பேசியுள்ளான். தூதனைக் கொண்டு தேவன் வெளிப்படுத்தின வார்த்தைகள் என்னவென்று பவுலுக்குத் தெரியும். தேவனின் அவ்வார்த்தைகள் மீது பவுலுக்கிருந்த உச்சகட்ட விசுவாசம் தான் "**எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாக நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்** " என்பது. இங்கே, தேவனுடைய வார்த்தைகளுக்குப் பவுல் கொடுத்த மரியாதையின் அளவைக் கவனியுங்கள். எப்படிப் பவுலால், இவ்வளவு மரியாதை, தேவனுடைய வார்த்தைகளுக்குக் கொடுக்க முடிந்தது? இதிலே இரகசியம் ஒன்று மில்லை. தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையைப் பவுல் நன்றாக அறிந்திருந்தார். வானமும், பூமியும் அவருடைய வார்த்தைகளின் வல்லமையால் உண்டானதென்பதும் அவ்வார்த்தைகளால் கடல் பிளந்ததும், கல்லறைகள் திறந்ததும் அவருக்குத் தெரியாததல்ல.

ஆகவேதான், பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ வார்த்தைகளின்படியாகவே நடக்குமென்று ஆணித்தரமாக விசுவாசித்தான். அற்புதங்கள் நடைமுறையில் இருந்த அந்த நாட்களில் – பல அற்புதங்களைச் செய்த பவுல், கடல் கொந்தளிப்பிலிருந்து அற்புதமான முறையில் விடுதலை கிடைக்குமென்று எதிர்பார்க்காமல், தனக்கு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளின்படியாகவே நடக்குமென்று நம்பினான். ஓர் அற்புதம் செய்து தங்களைக் காப்பாற்றுமென்று தேவனிடம் மன்றாடவுமில்லை, தனக்கிருந்த அற்புத வல்லமையைக் கொண்டு ஓர் அற்புதத்தை நிகழ்த்த முயற்சிக்கவுமில்லை.

ஆனால், இன்றோ ஓர் உன்னத நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட அற்புதங்கள், முதல் நூற்றாண்டோடு முடிந்துவிட்டதென்று வேதாகமம் தெளிவாகச் சொல்லியிருந்தும், அற்புதங்கள் நின்றுபோன இந்நாட்களில் வாழும் அநேகர், அதிலும் தங்களை மிஞ்சின பக்திமான்களென்று சொல்லிக்கொள்கிறவர்கள், தங்களுக்கிருக்கும் சளித் தொல்லைக்குக் கூட " தேவனே அற்புதமான முறையில் விடுதலை தாரும் " என்று கூப்பாடு போடுகின்றனர். கிறிஸ்தவத்தின் இச்சீர்கேடான நிலையைப் பார்த்து ஆத்திரப்படுவதா? அல்லது ஆதங்கப்படுவதா? என்று புரியவில்லை.

பவுலுக்கு தூதனைக் கொண்டு தேவன் தமது வார்த்தைகளை வெளிப்படுத்தினது போலவே, பரலோகத்தின் தேவன், தமது ஆவியானவரைக் கொண்டு, வேதவசனங்கள் என்னும் வார்த்தைகளை நமக்கு கொடுத்துள்ளார். பவுலைப் போல, எந்நிலையிலும் இந்த வார்த்தைகளின் மீது நாம் பிடிப்பும், பற்றும், நம்பிக்கையுமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பவுலுக்கு வைக்கப்பட்டிருக்கும் நீதியின் கிரீடம் நமக்கு கிடைக்க வேண்டுமானால், தேவனுடைய வார்த்தைகளின் மீது நாம் அபார நம்பிக்கையுடையவர்களாயிருக்க வேண்டும்.

அப்படியானால், தேவன் கொடுத்திருக்கும் இரட்சிப்பின் திட்டத்தை நாம் நம்பவேண்டும் [மத். 28,19,20; மாற் 16:16] சபையின் முக்கியத்துவம் குறித்து வேதம் பேசும்போது நம்பவேண்டும் [மத். 16:16] அப். 2:47; எபே. 5:23–25] கர்த்தரின் பந்தி குறித்து வேதம் பேசுவதை நம்ப வேண்டும். [மத். 26:26–30] உயிர்த்தெழுதலைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் வேதம் பேசுவதை நம்பவேண்டும். [மத். 25:31–46; யோவான் 5:28–29]. இயேசுக் கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்று தேவன் சொல்லுவதை நம்ப வேண்டும். [வெளி. 20:11–15,21:8] இவைகள் தான் தேவனை நம்புவதென்பதின் பொருள். இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் நான் தேவனை நம்புகிறேன் என்று யாராவது சொன்னால் அது பித்தலாட்டம். அது மாய்மாலம். நாம், பித்தலாட்டமும், மாய்மாலமுள்ளவர்களாக இல்லாமல், பவுலைப் போல் தேவன் மீது உண்மையான நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

# ஏன் நாங்கள் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லை?

**Bro. J.C. சோட்**

**நா**ம் வேதாகமம் பற்றிப் படித்த போது வேதாகமம் எப்படி மூன்று பிரதான பிரமாணங் களைக் கொண்ட காலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதென்று காட்டினோம். முதலாவது, முற்பிதாக்களின் காலத்தில் இருந்த பிரமாணம், இரண்டாவது மோசேயின் காலத்தில் இருந்த பிரமாணம், மூன்றாவது நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவின் பிரமாணம். வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பிரிந்து இந்தப் பிரமாணங்கள் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண உதவி செய்கிறது. முற்பிதாக்கள் மற்றும் மோசேயின் பிரமாணங்கள் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்துவின் பிரமாணம் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது. பழைய ஏற்பாடு இன்று நம்மைக் கட்டுப் படுத்துவதில்லை. ஆனால், புதிய ஏற்பாடு இன்றும் நம்மை தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. காலம் உள்ள வரை அது நம்மை கட்டுப்படுத்தும். நாம் மேலும் படிக்கும் போது, இதை வசனத்திலிருந்து நாங்கள் உங்களுக்கு எடுத்துக்காட்டுவோம்.

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அல்லது அறியாமலிருக்கிறீர் களோ, இன்று உலகத்தில் இருக்கும் மூன்று முக்கியமான மதங்கள், தங்கள் விசுவாசத்திற்காக பழைய ஏற்பாட்டிற்குச் செல்கிறது. அம்மதங் களைச் சார்ந்தவர்கள் பழைய ஏற்பாடு தங்களை கட்டுப்படுத்துகிறதாக எண்ணி, அதை விசுவாசித்து, மற்றவர்களையும் அதற்குக் கட்டுப் படுத்தத் தேடுகிறார்கள். அவர்கள் காரியங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதாகமத்திலிருந்து நாங்கள் உங்களுக்குக் காட்டுவோம்.

ஓர் ஏற்பாடு என்பது உயிலைக் குறிக்கிறது என்று நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு மனிதனு டைய உயில் அல்லது அவன் செய்து வைத்திருக்கும் ஏற்பாடு குறித்து நாம் பேசுகிறோம். இன்றைய நாட்களில் அநேகர் தங்கள் மரணத்திற்குப் பிறகு தங்கள் சொத்து அல்லது பணம் என்ன செய்யப்பட வேண்டும் என்பது குறித்து உயில் எழுதி வைக்கிறார்கள். சிலர், தங்கள் மரணத் திற்கு முன்பு ஒன்றுக்கும் மேற்பட்ட உயிலைக் கூட எழுதி வைக் கிறார்கள். ஏனென்றால், வாழ்க்கையின் அந்திய காலத்தில் தங்களுக்கு முதல் உயில் பிடிக்கவில்லையென்றால், இரண்டாவது உயிலைப்

பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் உயிரோடிக்கும் வரை தாங்கள் தெரிந்து கொள்ளுகிறபடி எத்தனை உயில்களை வேண்டுமானாலும் உண்டாக்கலாம். அவர்கள் வைத்திருக்கும் செல்வத்தை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அவர்கள் மரிக்கும் போது, அவர்களின் கடைசி உயில் தான் செல்லுபடியாகும், அது சட்டப்பூர்வமான உயிலாக இருந்தால். பணமும், சொத்தும் அந்த உயிலின் நிபந்தனைகளின்படி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

அதுபோலவே, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்திக் கொடுத்தார். அது நூற்றுக் கணக்கான வருடங்கள் தொடர்ந்தது. அந்த வருடங்களில் அது அவர்களைக் கட்டுப்படுத்தியது. ஆனால், தேவன் ஒரு புதிய ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்தின நாள் ஒன்று வந்தது. தேவன் அந்த ஏற்பாட்டைக் கொடுத்த போது, கிறிஸ்துவின் மரணத்தினால் அது முத்திரைப் போடப்பட்டபோது, முதல் ஏற்பாடு பழைமையாய்ப் போயிற்று. அதனால் தான், நாங்கள் பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் குறிப்பிடுகிறோம். எப்படி இந்த தேசத்தில் வாழும் ஒருவர், நூறு வருடங்களுக்கு முன்பு இந்த தேசத்தில் இருந்த சட்டத்தின்படி வாழ முடியாதோ, அது போலவே, நாமும் பக்தியின் பெயரால் செய்யும் காரியங்களுக்கு பழைய ஏற்பாட்டுக்குச் செல்ல முடியாது. மாறாக, இன்று வாழும் மக்கள் இன்று என்ன சட்டம் நடைமுறையில் இருக்கிறதோ அதன்படி தான் வாழவேண்டும். அதுபோலவே, இன்றைய நாட்களில் வாழும் நாம் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி ஆளப்படுவதில் திருப்திபட்டுக் கொள்ள வேண்டும்.

வேதவசனங்கள் அப்படித்தான் போதிக்கிறதா என்பதைக் காண நாம் இப்பொழுது வசனங்களிடத்தில் செல்வோம். புதிய ஏற்பாட்டின் எபிரெயர் புத்தகத்தை என்னோடு திருப்பிக் கொள்ளுங்கள். அங்கே கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும் போது, இதன் ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். "*ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே*" [எபிரெயர் 9:15-17]. கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, முதலாம் ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த உண்மையுள்ளவர்களுக்கு அவர் இரட்சிப்பை சாத்தியமாக்கினார். ஆனால், அவர் மரித்த போது, பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, அதற்குப் பதிலாக புதிய

ஏற்பாட்டை வைத்தார் என்பதை தயவு செய்து கவனியுங்கள். மரண முண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும் என்று அவர் சொன்னதை மறுபடியும் உற்று கவனியுங்கள்.

நாம் தொடர்ந்து படிக்கும் போது, எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்லிக் கொண்டு போகிறார். " *இப்படியிருக்க, நியாயப்பிரமாண மானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப் படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒரு தரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர் களுக்கு இல்லாதிருப்பதினால், அந்த பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவை களுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே. ஆகையால், அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; சர்வாங்க தகன பலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமான தல்ல என்றீர். அப்பொழுது நான்; தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப் பிரமாணத்தின் படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி; பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகன பலிகளையும், பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை. அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு: தேவனே, உம்முடைய சித்தத் தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்* " [எபிரெயர் 10:1-10]. பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற பிரமாணமானது வரப்போகிறவைகளுக்கு நிழலாய் மாத்திரம் இருக்கிறது என்று எபிரெய ஆசிரியர் எடுத்துக்காட்டுவதை கவனியுங்கள். செலுத்தப்பட்ட பலி களினாலே அவர்களுடைய பாவங்களை முற்றிலுமாக, நிரந்தரமாக எடுத்துப் போட முடியவில்லை. ஏனென்றால், அவர்களுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைக்கப்படுகின்றன. அதன் பின்பு, கிறிஸ்துவினு டைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதென்றும் அந்த பலியின் மூலமாக கிறிஸ்து முதலாவதை அதாவது, பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, இரண்டாவதை அதாவது, புதிய ஏற்பாட்டை நிலை நிறுத்தினார் என்றும் எபிரெய ஆசிரியர் சொல்லுவதைக் கவனியுங்கள். இப்பொழுதும் சாத்திய மானதாக இருந்தால் கூட பழைய ஏற்பாட்டுக்குத் திரும்பிச் செல்ல

யார் விரும்புவர்? சிலுவையில் கிறிஸ்து அடைந்ததியாக மரணத்தின் முக்கியத்துவத்தையும், நாம் பழையதை விட ஒரு சிறந்த மேலான பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம் என்பதையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் யாரும் நிச்சயமாக பழைய பிரமாணத்துக்கு திரும்பிச் செல்லமாட்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி கிறிஸ்துவே மோசேயின் பிரமாணத்தின் கீழ் தான் வாழ்ந்தார். ஆனால், தன்னுடைய மரணத்துக்குப் பிறகு நடைமுறைக்கு வந்து, புதிய ஏற்பாடாக அதன் கீழ் இருந்து வாழ்பவர்களைக் கட்டுப்படுத்தும் சத்தியத்தையும், கொள்கை களையும் உபதேசிப்பதில் தன்னுடைய நாட்களைச் செலவிட்டார். ஆகவே, கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது, நியாயப் பிரமாணத் தைக் கடைப்பிடித்து மற்றவர்களை அதன்படி செய்ய உற்சாகப்படுத் தினார். அவர் இப்படியாக விளக்கினார். *"நியாயப்பிரமாணத்தையானா லும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்று வதற்கே வந்தேன். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஓர் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் "* [மத். 5: 17,18]. இங்கே கிறிஸ்து, நியாயப்பிரமாணம் அழிக்கப்படமாட்டாது. ஆனால், அது நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார். அது நிறைவேறின பிறகு அதற்கு என்ன நடக்கும்? இயற்கையாகவே அது ஒழிந்து போகும் அல்லது யாரையும் தன்னுடைய பிரமாணங்களால் கட்டுப்படுத்தாது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது [மத். 27:50]. இது தேவாலயமும், பழைய பிரமாணத்தின் எல்லா காரியங்களும் முற்றிலு மாக நீக்கப்பட்டு அவைகள் ஒரு போதும் மனிதனைக் கட்டுப்படுத்தாது என்பதற்கான அடையாளமாக இருந்தது.

II கொரிந்தியர் 3:6 ம் வசனத்தில் பவுல் சொல்லும் போது, *" புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதா யிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது "*. இந்த வசனத்திலும் பின்வரும் வசனத்திலும் பவுல் கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த மோசேயின் பிரமாணத்துக்கும், ஆவியின் பிரமாணமாகிய கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். எழுத்து எப்படிக் கொல்லுகிறது என்றும், அதே நேரத்தில் கிறிஸ்துவின் பிரமாணம் எப்படி ஜீவனைக் கொண்டு வருகிறதென்றும் காட்டுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல், மோசேயின் பிரமாணத்துக்கும், கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை

கலாத்தியா கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல. தேவனே ஒருவர். அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்தானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே. அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குதத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால், விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள் [கலா. 3:19-29]. கலாத்தியா கிறிஸ்தவர்களிடம் பவுல் நியாயப்பிரமாணம் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்ததாகவும் அதற்கு பிறகு அவர்கள் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை என்றும் கூறுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அதன் நோக்கம் முடிந்த பிறகு எடுத்துப் போடப்பட்டது. இப்போது நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர்களாயிருந்தால் நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்.

நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லை அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பதை தெளிவாகக் காட்டுவதற்கு ஏராளமான வேதவசனங்கள் இருக்கின்றன. நாம் எல்லோரும் இப்போது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம். சிறந்ததும் மற்றும் பூரணமானதுமான பிரமாணத்தின் கீழ் இருப்பதற்கு நாம் எவ்வளவு பாக்கியவான்களாயிருக்க வேண்டும்!

என் நண்பர்களே, கிறிஸ்து நீங்கள் இரட்சிக்கப்படும்படி உங்களுக்காக மரித்தார். நீங்கள் அவரை விசுவாசித்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். ❁

பெண்கள் பகுதி

# நான் மன்னிப்பு கேட்கமாட்டேன்

சகோ. ரேச்சல் நாயகம்

ஏதாவது ஒரு பிரச்சனையின் போது தவறு செய்த ஒரு நபர், தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்கமாட்டேன் என்பது மனிதனுக்கே உண்டான குணம். நான் மன்னிப்பு கேட்காவிட்டால் பிரச்சினையை வேறுவிதமாக மாற்றி விடுவார்கள் என்று நினைத்து சிலர் ஒப்புக்கு மன்னிப்பு கேட்பார்கள்.

காரணம் எப்படியிருப்பினும் " நான் வருந்துகிறேன் " என்று ஒரு வார்த்தை கூட மனப்பூர்வமாகக் கூறாமல் இருக்கும்போது, பிரச்சினையும் தீராது. அதனால், ஏற்படக்கூடிய விளைவு கால காலத்திற்குப் பயங்கரமானதாகவே இருக்கும்.

பற்பல காரியங்களில், மனுக்குலத்தின் மனம் ஒன்றுக்கொன்று வேறுபட்டே காணப்படுகிறது. மற்றவர்களின் மனதை மதிக்காமல் அல்லது பிறரின் உணர்வுகளை அறவே ஒதுக்கி விட்டு நம்முடைய சொந்த விருப்பத்திற்குட்பட்டு காரியங்களைப் பார்க்கிறவர்களாக இருக்கிறோம். பொதுவாக, கணவன் மனைவிகளுக்கிடையே இப்பேர்ப்பட்ட பிரச்சினை அடிக்கடி வந்து சேருகிறது. சம்பந்தப்படாதவர்களிடையேயும், வேலை செய்யும் பிற நபர்களோடும் பிரச்சினை வரும் போது நாம் நடந்து கொள்ளும் முறையை விட மோசமான நிலையில் தான் கணவனும், மனைவியும் நடந்து கொள்கிறோம். அன்றாட வேலைப் பளுவினாலும், களைப்பு, சவால்கள், தைரியமற்று சோர்ந்த நிலை இவைகள் யாவும் சேர்ந்து கடுமையான, சூடான வார்த்தைகளில் போய் முடியும். செயல்களில் மாறுபாடு, வார்த்தைகள் அள்ளி வீசப்படுதல், அதனால் ஏற்படும் மனவேதனை, பிறகு கண்ணீர் சிந்துதல் இவையெல்லாம் எதனால்? கணவன், மனைவி இருவரில் ஒருவர் செய்த தவறுதலினால் தான்.

சரி, செய்த தவறுக்காக இங்கு யார் மன்னிப்பு கேட்பது? சொல்லப்போனால் அவளோ அல்லது அவனோண, நான் தவறு செய்து விட்டேன், நான் இவ்வாறு செய்திருக்க கூடாது என்று தங்களையே தற்பரிசோதனை செய்து, உணண்மையை ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அதற்குப் பதிலாக பிரச்சினையை வேறு வகையில் கையாளுவார்கள். சண்டையைத் தவிர்ப்பதற்கு அமைதி காப்பார். வேறு வேலைகளில் ஈடுபட்டு பிரச்சினையின் கடுமையைக் குறைப்பர். இப்படிப் பல மணி நேரங்கள் கழியும். ஆனால், இருவரின் உள்ளத்திலும் கசப்புணர்வு வளர்ந்து கொண்டேயிருக்கும். ஒருவேளை அடுத்த நாள், அதற்கடுத்த நாள் காரியங்கள் இயல்பான

நிலைக்கு வந்திருப்பது போல் தோன்றும். உரையாடல்கள் நடக்கும். வாழ்க்கை தொடரும்.

ஆனால், இருவரின் உள்ளத்திலும் என்ன ஏற்பட்டிருக்கும்? காயங்கள். தற்காப்புக்காக மனக்கடினத்தை வளர்த்துக் கொள்வோம். காயம் ஆறாமல் அப்படியே இருக்கும். அதனால், ஏற்படக்கூடிய நிலையான தழும்பு தான் மிச்சம். காயம், கடினத் தன்மை, தழும்பு என்று ஒன்றன் மேல் ஒன்றாக சேர்த்து அடுக்கிக் கொண்டே போய், பிறகு ஒரு நாளைக்கு கோபத்தில் வெடித்து, கசப்பு வெளிப்பட்டு, பிரச்சனை யானது முற்றிய நிலைக்கு வந்து விடுகிறது.

" நான் மன்னிப்பு கேட்க மாட்டேன் " என்று கணவனும், மனைவியும் தீர்மானித்ததை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்திப் பார்க்க வேண்டும். " நான் வருந்துகிறேன் ". என்பது ஒரு சிறிய வார்த்தைதான், சொல்லு வதற்கும் சுலபம். ஆனால், வல்லமை நிறைந்த வார்த்தை.

நான் வருந்துகிறேன் என்ற உண்மையான வார்த்தை என்ன செய்யும்? முதலாவது, அது உண்மையான வருத்தமாயிருந் தால், உள்ளத்தில் ஆராய்ந்து அதன் பிறகு நான்தான் பாதி அல்லது முழுக்காரணமும் என்று ஒத்துக் கொண்டதாக இருக்கும். தவறை ஒத்துக்கொள்ளும் போது அங்கே பெருமை அழிந்து, தாழ்மையான சிந்தனை உண்டாகிறது. இப்படி மனந்திரும்பி, மன்னிப்பு என்ற தைலத்தை பூசும்போது இருவரின் உள்ளத்திலும் சுகம் பிறக்கிறது. கடினத்தன்மை மாறுகிறது. சமாதானத்தோடு, கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சனையிலிருந்து விடுபட்டு புதிய வாழ்க்கை மேற் கொள்ள ஏதுவாகிறது.

பரிசுத்த ஆவியினால் ஏவப் பட்டு, அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது, **நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ் செய்யா திருங்கள்; சூரியன் அஸ்தமிக் கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என் கிறார்** [எபே. 4:26] இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவதாக, ஒரு கிறிஸ்தவன் கோபமே கொள்ளக்கூடாது என்றோ அல்லது கோபங் கொள்வது பாவம் என்றோ கூறவில்லை. இந்த உலகிலே தவறுகள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டுதான் இருக் கிறது. தவற்றுக்காக கோபப்படுவது நியாயமானது, சரியானது. ஆனால், பவுல் இங்கே என்ன கூறுகிறார் என்று பாருங்கள், " நீங்கள் கோபங் கொண்டாலும், பாவஞ் செய்யா திருங்கள் ". இது கைக்கொள் வதற்கு சிரமம்தான். ஆனால், இப்படித்தான் செய்ய வேண்டும்.

ஒரு குடும்பத்தில், கணவன் முன்கோபக்காரனாய், வார்த்தை களை அள்ளி வீசுகிறவனாக இருக்கிறான். அவன் மனைவியும் தனக்கே இயற்கையாக அமைந்த சுபாவத்தால், அதே வேகத்தில் வார்த்தைகளை வீசி கோபக் கனல் பற்றி எரியும்படி செய்கிறவளாக இருக்கிறாள். இப்படிப்பட்ட குடும்பத்தில் சமாதானம் எங்கே இருக்கும்? வேதாகமம் இப்பேர்ப் பட்ட மனைவிகளுக்கு என்ன

ஆலோசனை கூறுகிறது? வாசிப்போம். [நீதி. 15:1] மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும். கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். மெதுவான பிரதியுத்தம் – மெதுவான பதில் சொல்லப் பழகிக் கொண்டால் கடினத்தன்மை மாறி அமைதியை உருவாக்க முடியும். சண்டையை ஒழிக்கலாம்.

ஆம், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி வசனம் தான். பொறுமையான பதில், சமாதானத்துக்கடுத்த காரியங்களின் மேல் ஒரு வாஞ்சை, இவைகளை கையாண்டால் கோபத்தை தவிர்க்கலாம்.

பவுலின் புத்திமதியில் இரண்டாம் பகுதி, சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என்பது. கோபத்துடன் நீங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் எழும்போது இன்னும் அதிக எரிச்சலும், கோபமுமுள்ள நிலையில் தான் எழுந்திருப்பீர்கள் என்பதை எப்போதாவது நீங்கள் உணர்ந்ததுண்டோ? எனவே தான் இங்கே வசனத்தின் மூலம் எச்சரிக்கப்படுகிறோம். கோபத்தை அதிக நேரம் உள்ளே வைத்து அதை வளர விடக்கூடாது. அது அழித்து விடும்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இம்மாதம் **கோபம் வேண்டாம், மெதுவான பதில்** இவைகளைப் பற்றி பார்த்தோம். தவறுக்காக மன்னிப்பு கேட்பது அவசியம். மன்னிப்பு சமாதானத்துக்கு வழிவகுக்கிறது.

ஒரு கிறிஸ்தவப் பெண் **வசனத்தையே** பார்த்து **வசனத்தின்படி** வாழ்ந்தால் எவ்வளவு தீமைகளை வெல்லலாம்! நம்முடைய எல்லா தவறுகளுக்கும், தேவன் பரிசுத்த ஆவியின் மூலம் கொடுத்த வேத வசனங்கள் மா மருந்தாக இருந்து நம்மை விடுதலை செய்து நல்வழிப்படுத்துவதாக இருக்கிறது. சத்தியம் தான் நம்மை விடுதலையாக்குகிறது [யோ. 8:32]. எனவே, வேதத்தை அன்றாடம் வாசித்து, தியானிப்போம். மனித உபதேசங்களுக்கு செவி கொடுக்காமல், தேவ வசனத்துக்கு செவி கொடுத்து, கீழ்ப்படிவோம். தேவ வசனத்துக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கை, நம்மை திருத்தி, நித்திய அழிவிலிருந்து நம்மையும், நம் குடும்பத்தையும், நம்மைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக் கொள்ள உதவி செய்யும்.

| | | |
|---|---|---|
| ஒரு வீர மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று அதை அணிந்து கொள். |
| ஒரு உதாரத்துவ மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று பகிர்ந்து கொள். |
| ஒரு கஞ்ச மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று சேமித்து வை. |
| ஒரு ஊதாரி மனிதனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று செலவழி. |
| ஒரு வட்டிக்காரனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று வட்டிக்குக் கொடு. |
| ஒரு சூதாட்டக்காரனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று அழித்து விடு. |
| ஒரு கிறிஸ்தவனின் குறிக்கோள் | : | தங்கத்தை வென்று கர்த்தருக்காகப் பயன்படுத்து. |

வாலிபர் பகுதி

# சிலுவை சுமக்க ஆயத்தமா?

**Bro. Benny Martin**

பிரியமான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவரையும் இரட்சகராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். அன்பானவர்களே! உலக முழுவதுமுள்ளவர்களின் இரட்சிப்பு இயேசுவையும், அவருடைய சிலுவையையும் மையமாகக் கொண்டுள்ளது. தேவக்குமாரனின் தியாகம் மனித இனத்தைக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தேவனிடத்தில் இழுத்து வருகிறது. உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தன் சத்துருக்களால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச்சேவகரால் துன்புறுத்தப்பட்டு, பரியாசம் செய்யப்பட்டார். சத்துருக்கள் அவரைக் காரித்துப்பி, அதன்பிறகு கொடூரமான கோரச் சிலுவையில் கொலை செய்தனர். இயேசுவின் சிலுவை மரணத்தை மத்தேயு ஆசிரியர் இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் [மத். 27: 35,36]. இது, பழைய ஏற்பாட்டில் சங்கீதக்காரனாகிய தாவீது உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது [சங். 22:18].

சிலமணி நேர பாடுகளுக்குப் பிறகு இயேசு சிலுவையில் தன் ஜீவனை விட்டார். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவின் பாடுகளை நேரில் பார்த்தது போலவே விவரித்திருக்கிறார். அதுவும், கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்த அதிகாரத்தைப் படிக்கும்போது நாம் மெய்யாகவே மெய்சிலிர்த்துப் போகிறோம். இந்த சிலுவைப் பாடுகளை அனுபவிக்க அவருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அவர் என்ன பாவம் செய்தார்? இல்லை, அவர் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை. ஆனால், என் பாவங்களுக்காகவும், உங்கள் பாவங்களுக்காகவும், இயேசு அக்கோரக் குருசில் தமது குருதியைச் சிந்தினார். வாலிபர்களே! இவ்வுலகில் நமக்காக, நம் பாவங்களுக்காக யாராவது உயிரை விடுவார்களா? உயிரை விடாவிட்டாலும் பரவாயில்லை, பாடுகளையாவது படுவார்களா? நிச்சயமாகவே, அதற்கு யாரும் தயாராக இல்லை. ஆனால், இயேசு நமக்காக பாடுகள் பட்டதற்கும், சிலுவையில் மரித்ததற்கும் தூண்டுகோலாக அமைந்தது அவர் நம்மீது வைத்த அன்புதான். இப்போது, இச்சிலுவையில் எவைகளை அடையாளப்படுத்துகிறது என்று நாம் பார்ப்போம்.

## I சிலுவை பாவத்தின் ஆழத்தைச் சுட்டிகாட்டுகிறது

கிறிஸ்துவைப் பற்றி மாபெரும் உண்மைகளை இந்த சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது, இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தைச் சுட்டிக்காட்டுகிறது. பாவத்தின் கோரத்தைச் சிதைந்து போன குடும்பங்களிலும் பயங்கர பகையுணர்விலும் நாம் காணலாம். ஆனால், இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத் தன்மை யோடு, மனிதனுக்குக் காட்டும் தேவனுடைய மாபெரும் முயற்சியாகும். தேவமைந்தனின் சிலுவை மரணத்திற்கு நம் பாவமே காரணமாக அமைந்தது. பாவமே அறியாத இயேசுவை தேவன் நமக்காக பாவ மாக்கினார் [2 கொரி. 5:21]. பரலோகத்தின் பொக்கிஷமாகிய இயேசு இப்பாழுலகத்திற்கு வந்து பாடுபட வேண்டும் என்று என்ன அவசியம் அவருக்கு ஏற்பட்டது? அருமையான வாலிபர்களே! நாம் பாவம் செய்ய தூண்டப்படும்போது, அந்த சிலுவைக் காட்சியை நம் கண்களுக்கு முன்பாக கொண்டு வந்தால் இப்பூலோக மேன்மை நஷ்டமென்று உணர ஆரம்பிப்போம். இதைக்குறித்து பவுல் கூறும் போது, " கிறிஸ்துவினு டைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லோருக் காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லோரும் மரித்தார்களென்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித்தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் " [2 கொரி. 5:14,15]. நமக்காக சிலுவையில் தம் ஜீவனையே விட்ட கிறிஸ்வுக்காக வாழ அவருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவ வேண்டும்.

## II சிலுவை இரக்கத்தின் அகலத்தை சுட்டிக்காட்டுகிறது

தேவனுடைய அளவில்லா இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஓர் அடையாளமாக இருக்கிறது. அது இயேசு சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்கிறது. தீமை தண்டிக் கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருந்தாலும், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக்கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனை யைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவன் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம் மேதியர், பெர்சியராலே கொடுக்கப் பட்டது. மேதியர், பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. அதுமாத்திரமல்ல, அவைகளின் தண்டனைகளுக்கு யாரும் தப்பித்துக் கொள்ளமுடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்கு கண்ணும், பல்லுக்கு பல்லும் கேட்கப்படும். ஒருசமயம், ஓர் இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களை கெடுத்துப்போட்டான். அவனுடைய குற்றத் திற்கு தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்லிற்று. அந்தக் குற்றவாளி

விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்து விட்டது. அங்கே நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் அழுகை சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. அந்த நீதிபதி தன் மகனை அதிகமாக நேசித்தான். ஆனால், அதைவிட அதிகமாக நாட்டுச் சட்டத்தை மதித்தான். அதனால், தவறு செய்தவன் யாராக இருந் தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உடையவனாக் காணப் பட்டான். நீண்ட நேர யோசனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னான். " உன் நீதிபதி என்ற நிலையில், நீ அழித்த இரண்டு கண்களுக்குப் பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டத்தின் தண்டனையை நான் உனக்கு விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்கு குறைவான தண்டனையை உனக்கு விதிக்க முடியாது. ஆனால், உன் தகப்பன் என்ற நிலையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன் " என்று சொன்னாராம். இது இரக்கத்தைப் பற்றிய ஒரு பாடமாக நமக்கு அமைகிறது. எனவே, சிலுவையானது மனிதனுக் கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

## III சிலுவை இரட்சிப்பின் வல்லமையைச் சுட்டிக்காட்டுகிறது

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப் படுத்துகிறது. " சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர் களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது " [1கொரி. 1:18]. கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான். கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லையென்றால் இரட்சிப்பு என்பது எட்டாக்கனியாக, ஒரு கானல் நீராகத்தான் இருக்கும். நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படவில்லையென்றால், நித்திய நரகத்தில் நம் நாட்களை கழிக்க வேண்டும். கொல்கொதாவில் தேவ குமாரன் தமது ஒரு கரத்தை பரலோகத்திற்கு நேராக நீட்டி தேவனை பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனுடைய இருதயத்தை தொட்டுள்ளார். அதன்மூலம் சிலுவையில் தொங்கின கிறிஸ்து மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார்.

இப்படி, நமக்காக சிலுவையில் மரித்து நம் இரட்சிப்பிற்கு வழிவகுத்த இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி; " ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக் கடவன் என்று சொல்லியிருக்கிறார் " [மத். 16:24]. இங்கே சிலுவை என்பது பாடுகளைக் குறிக்கிறது. நமக்காக பாடுகள் பட்ட அருள் நாதராகிய இயேசுவுக்காக, அவருடைய தியாகத்திற்காக இவ்வுலகின் பாடுகளைப் பற்றி பதறாமல் பாடுகளை சுமந்து கொண்டு அவரைப் பின்பற்றுவோம், பரலோகம் சென்றடைவோம். அதற்கு கர்த்தர் தாமே உதவிச் செய்வாராக ஆமென்.

சிறுவர் பகுதி

# தண்ணீர் திராட்சை ரசமாக ...

**Bro. ABEL R. NAYAGAM**


எனதருமை சிறுதம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல் சொல்கிறேன். நீங்கள் அனைவரும் இயேசுவிற்கு பிரியமாக நடந்து வருவீர்கள் என நான் நம்புகிறேன். மாதந்தோறும் வெளிவரும் கதைகளும், பாடங்களும் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் இயேசு செய்த அற்புதத்தை ஆராய்ந்து அதிலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ள முயற்சிப்போம். வாருங்கள் !.

நீங்கள் சமீபத்தில் ஏதாவது கல்யாண வீட்டிற்கோ அல்லது கல்யாண விருந்திற்கோ போனீர்களா? அப்படிப் போயிருந்தால் நீங்கள் சில நேரம் அங்கே இருந்து விருந்து உண்டபின் வந்திருப்பீர்கள். ஆனால் பாருங்களேன், புதிய ஏற்பாட்டு காலத்தில் கல்யாண காரியங்கள் வித்தியாசமாக நடந்துள்ளது.

அப்படி என்ன வித்தியாசம் என்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள். கல்யாண வீட்டிலே மிகப்பெரிய விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அது ஒருவாரம் வரை நீடிக்கும். பொதுவாக நண்பர்கள், உறவினர்கள், பாட்டுப்பாடி மகிழ்விப்பார்கள் என யாவரும் வந்திருப்பார்கள். இதைவிட முக்கியம் வந்த அனைவருக்கும் போதுமான அளவு விருந்து கொடுக்க வேண்டும்.

அப்படியொரு கல்யாணத்திற்கு நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சென்றார். அங்கே திராட்ச ரசம் தீர்ந்து போயிற்று. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு இயேசுவின் உதவி தேவைப்பட்டது. அங்கே இருந்தவர்கள் யாரும் அற்புதத்தை பார்த்ததில்லை. ஆனால் அவளோ அவரை நம்பினாள். எனவே வேலைக்காரரிடம் "**ளீஓளங் ரிமண்நீஓளஹூற் றூநீஊண்று ரிமஷிஞன்ஊண** " என்று கூறினாள்.

யூதர்களுடைய வீட்டிலே கற்களால் ஆன ஜாடிகள் இருந்தன. அவைகள் தண்ணீர் சேகரிக்க வைத்திருப்பர். அவைகளில் இயேசு தண்ணீர் நிரப்பச் சொன்னார். அந்த வேலைக்காரரும் அப்படியே செய்தார்கள். ஆனால் "அற்புதமாக" அவை திராட்சை ரசமாக மாறின. அதை அவர் தம் கையால் தொடவில்லை. தண்ணீர் அற்புதமாக திராட்ச ரசமாக மாறவேண்டும் என நினைத்தார். அது நடந்தது.




பின்பு வேலைக்காரர், அதை எடுத்து பந்தி விசாரிப்புக் காரரிடத்தில் இயேசு கட்டளை யிட்டபடியே கொடுத்தார்கள். அது எங்கிருந்து வந்ததென்று பந்தி விசாரிப்புக்காரனுக்கு தெரியாதிருந்தது.

அதை ருசித்த போது, " நீரோ நல்ல ரசத்தை இதுவரை வைத் திருந்தீரே " எனக் கூறி வாழ்த் தினான். [யோவான் 2:10] என்ன அற்புதம் பாருங்கள் ! தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார். **ளீமு ளீஜிபூல் ரிமஷிற் ற்ஊண்று புடெற்று.**

சரி, இதிலிருந்து என்ன பாடம் நமக்கு கிடைக்கிறது? இதிலிருந்து நாம் அற்புதத்தின் அவசியத்தை உணர்கிறோம். இயேசு சொன்ன காரியம் உண்மையென்றும், அவர் தான் தேவனுடைய குமாரன் என்றும் மற்றவர்கள் நம்புவதற்கு அற்புதங்கள் தான் சான்று களாக இருந்தன. இப்படிப்பட்ட இயேசுவை ஆண்டவராகக் கொண்டி ருப்பது நிச்சயமாக நமக்கு ஓர் ஆசீர்வாதம். எனவே, அந்த ஆசீர்வாதத்தை தவறாமல் காத்துக்கொள்வது அவசியம். அதை பத்திரப்படுத்த இச்சிறுவயதிலிருந்தே முயற்சிப்போம்.

தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் !

## நாளும், நடப்பும்

1. பதினாறவது மக்களவைத் தேர்தல் விறு விறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.
2. இஸ்ரேல் - பாலஸ்தீன சமாதானப் பேச்சு வார்த்தையில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.
3. ஒலியை விட வேகமாக சென்று தாக்கக்கூடிய பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி.
4. அமெரிக்க அதிபரின் தூதராக இந்தியர் நியமனம்
5. புதிய அரசு அமைந்ததும் இந்தியாவுடன் மீண்டும் பேச்சு வார்த்தை - பாகிஸ்தன்.
6. பிளஸ் 2 தேர்வு முடிவு மே 9; பத்தாம் வகுப்பு தேர்வு மே 23ல்
7. இந்தி அணியை வீழ்த்தி இலங்கை டி-20 உலகக் கோப்பையைக் கைப்பற்றியது.

# நிஜத்தைப் பேசாதே

## Bro. K. பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான " திருமறை ஆசான் " வாசகர்களாகிய சகோதர, சகோதரிகளுக்கு இயேசு ஆண்டவர் நாமத்தில் வாழ்த்துக்கள். நிஜத்தைப் பேசாதே என்ற இத்தலைப்பு உங்களுக்கு வியப்பை அளிக்கலாம். உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லாத தென்றும் என்று தானே நாம் சொல்ல கேள்விப் பட்டிருக்கிறோம்? அது சரிதான். எது உள்ளது, எது இல்லாதது என்பதுதான் இச்செய்தியின் சாராம்சம். நம் அனைவருக்கும் தெரிந்தபடி நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். பெரும்பாலானோர் அறிக்கை என்பதை பாவத்தை அறிக்கை செய்வதோடு சம்பந்தப்படுத்திக் கொள்கிறார்கள். பாவ அறிக்கை என்பது இரட்சிக்கப்பட்ட சபை மக்களுக்கு மட்டுமே கொடுக்கும் ஆலோசனையாகும். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கு முன்பாகத் தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுபவனுக்கு இரக்கம் பெறுவான் என்ற பலனே உண்டு. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மட்டுமே சுத்திகரிப்பு கிடைக்கிறது.

இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும் என்பதையே நாம் சற்று ஆழ்ந்து கவனிக்க வேண்டும். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவனை நானும் அறிக்கைப் பண்ணுவேன் என்று ஆண்டவர் சொன்னதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் போது அவருடைய வார்த்தைகள் நம் வாயில் வைத்து பேசுவது தான் நாம் கிறிஸ்துவை அறிக்கை செய்வதாகும். அநேகர் **"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை"** என்ற வசனத்தை தப்பாக எடுத்துக் கொண்டு சபையில் இருந்து கொண்டே உலக ஜனங்களைப் போல் வாழும் அபாயத்தில் இருக்கிறார்கள். ஒரு முக்கிய விஷயம் என்ன வெனில் கிறிஸ்துவுக்கு முன்பாக மட்டுமே 'ஒருவனாகிலும் இல்லை" என்பது பொருந்தும். ஆனால் 2 கொரி 5:21ன்படி எப்படி கிறிஸ்து பாவமானார் என்பது உண்மையோ அப்படியே நாம் நீதிமான்களாக்கப் பட்டதும் நிச்சயம் [ரோமர் 5:9]. ஆகையால் பரிசுத்தமான, வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையே சபை மக்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் நம்மை சரி செய்து கொண்டு வாழத்தான் தேவன் நம்மை சபையில் சேர்த்திருக்கிறார். இல்லையெனில் நாம் நியாயத்தீர்ப்பில் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் [2 கொரி 5:10] என்பதை மனதில் வைக்க வேண்டும்.

நாம் நீதியாக வாழ்வதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவரும், இயேசு ஆண்டவரும் நமக்காக வேண்டுதல் செய்கிறார்கள் [ரோமர் 8:26, 34]. சபை மக்கள் மகிழ்ச்சியாக சந்தோஷமான விஷயத்தை


அனுபவிக்கவே நம் பரம தகப்பன் விரும்புகிறார். ஆனால் சபைக்கு வெளியே உள்ள மக்கள் சந்தோஷமாக இருப்பதை போலவும் சபைக்குள் இருப்பவர்கள் துக்கமாக இருப்பதைப் போலவுமான ஒரு மாயையான சூழ்நிலையையே நாம் இன்றைய நாட்களில் காண்கின்றோம். அது உண்மையல்ல. தேவன் நமக்கு மாத்திரமே சந்தோஷமாயிருக்கும் படியான அருமையான, சத்தியமான வாக்குத்தத்தங்களை அருளிச் செய்திருக்கிறார். கிறிஸ்துவின் சபையார் ஆகிய நாம் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதினால் நாமும் நம்முடைய பிள்ளைகளும் கூட நன்றாயிருப்பார்கள் உபா. 4:40. சிலர் இது பழைய ஏற்பாடு என்று நம்ப மறுக்கலாம். ஆனால் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் உபதேசம், தேவனுடைய உபதேசம் என்கிறார் [யோவான் 12:49] ஆக பழைய ஏற்பாட்டில் தேவன் சொன்ன ஆசீர்வாதம் மாறாதது. எபி .13:5 ல் யோசுவாவுக்கு தேவன் சொன்னதை பவுல் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே என்று கிறிஸ்தவர்கள் தைரியப்படுத்துகிறார். ஆக பழைய ஏற்பாட்டின் **ஆசீர்வாத வார்த்தைகளை** எடுத்து நாம் **இருதயத்தில் விசுவாசித்து** வாயில் பேசினால் [அறிக்கை பண்ணினால்] அந்த ஆசீர்வாதம் நமக்கு பலிக்கும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை வேண்டும். மாற் 11:22-24ன்படி ஆண்டவரும் சொல்லி சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அது பலிக்கும் என்று உறுதி யளிக்கின்றார்.

சரி, " நிஜத்தைப் பேசாதே" என்பதற்கு வருவோம் நாம் அறிந்த படி இருதயத்தின் நிறைவே வாய் பேசும், நம் வீணான வார்த்தை களுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். நாம் திருவசனத்தை விசுவாசித்து அதின்படி செய்கிறவர்கள். ஆகையால் இருதயத்தை வசனத்தால் நிரப்புகிறோம். ஆனால், ஒரு வருத்தமான உண்மை என்னவெனில் இருதயத்தில் இருக்கும் திருவசனத்தைப் பேசாமல், உலக வசனத்தை, சினிமா வசனத்தை, சொந்த வசனங்களையே அநேகர் பேசிக் கொண்டிருக்கிறோம். சில சகோதரர்களை நாம் விசாரிக்கும் போது அவர்கள் எங்க பிரதர் " **ஜான் ஏறினா முழம் சறுக்குது** " என்று உலக வசனத்தை நமக்கு மறுமொழியாக தருவதை நாம் கேட்கிறோம். நம் வாயின் வார்த்தைகள் மாற வேண்டும். விசுவாசமான வார்த்தைகள் நம் வாயிலிருந்து வராவிட்டால் உலகத்தில் தேவன் அப்படிப்பட்ட வார்த்தைகளை வேறு எங்கிருந்து தான் கேட்பார்? தேவனுக்கு பயந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வார்கள். கர்த்தர் அதை கவனித்து கேட்டு ஒரு ஞாபக புஸ்தகத்தில் எழுதி வைப்பார் என மல்கியா தீர்க்கன் சொல்கிறார். நம்முடைய ஞாபக புஸ்தகம் நிரப்பப்படுவதும், வெறுமையாக இருப்பதும் நாம் ஒருவரோடே ஒருவர் பேசிக் கொள்ளும் திருவசன அடிப்படையிலேயே இருக்கிறது என்பதை நம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய நிஜமான **சூழ்நிலையைப் பேசாமல் சத்தியமான தேவனுடைய**

வார்த்தைகளை நம் வாயில் அறிக்கை பண்ணவேண்டும். உதாரணத்திற்கு உண்மையில் ஒருவர் பொருளாதார கஷ்டத்தில் இருக்கிறார். அவர் அந்த தற்காலிக சூழ்நிலையைக் குறித்து கவலை யான வார்த்தை வாயில் அறிக்கையிடாமல், " என் தேவன் என் குறைவையெல்லாம் நிறைவாக்குவார் " என்ற சத்தியத்தை அறிக்கை யிடுவதை தேவன் எதிர்பார்க்கிறார். எனவே, நம்முடைய தற்காலிகமான, அதி சீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவங்களின் அடிப்படையில் நம் பேச்சு அமையாமல், கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் நான் தாழ்ச்சி அடையேன் என்று பேசுவோம். எதிரே நிற்கும் பூதாகரமான கோலியாத்தின் மீது கவனம் வைக்காமல் ஏற்கனவே சிங்கம், கரடி மீது வெற்றியைத் தந்த தேவன் மீது நம் சிந்தையை திசை திருப்புவோம். அப்போது தான் நம் இருதயம் தேவனுடைய வார்த்தை யால் நிறையும், விசுவாசம் பெருகும். அதை நம் வாயின் வார்த்தைகள் உறுதி செய்து விடுதலையையும், இரட்சிப்பையும் உண்டாக்கும்.

சாராள் தன் நாச்சியார் ஆகாரினால் அவமானப்பட்டபோது அவள் தன் கவனத்தை தேவனுடைய வாக்குதத்தின் மீது வைத்தாள். அதனால் பெலனடைந்து பிள்ளை பெற்றாள் என்று எபிரேய நிருபத்தில் காண்கிறோம் [எபி. 11:11] நாமும் நமக்கு வரும் இக்கட்டான சூழ்நிலை களில் சோர்ந்து போகாமல் சங்கீதக்காரனை போல, எனக்கொத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் என்று சொல்லி ஜெபித்து ஆசீர்வாதத்தை அடைவோம். நம் வாயின் வார்த்தைகள் கவலை, திகில், அவநம்பிக்கையாய் இருந்தால் பிசாசு சந்தோஷப்படு கிறான். எனவே தான், ஆண்டவர் என்னத்தை உண்போம், என்னத்தை உடுப்போம் போன்ற வார்த்தைகள் நம் வாயில் வரலாகாது என்கிறார். மீறி அவிசுவாச வார்த்தைகளை நாம் பேசும்போது அவை வீணான வார்த்தை களாகி நாம் கணக்கொப்புவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்து வனாந்தரத்தில் அழிந்தார்கள். காலேப், யோசுவா ஆகியோர் " கர்த்தர் நம்மோடே இருக்கிறார். நாம் பயப்படவேண்டியதில்லை என்றும், தேவனுக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள் " என்றனர் [எண். 14:1,9] எனக்கன்பான விசுவாசியே நம் வாயின் வார்த்தைகளே நமக்கு ஆசீரையும், சாபத்தை யும் வரவழைக்கும் வல்லமை பெற்றது. இதை உணர்ந்து நம் தேவன் நம்மேல் மனதுருகுகிற கர்த்தர் என்பதையும், மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், தேவனுடைய கிருபை நம்மை விட்டு விலகாது என்றும் அவருடைய சமாதானத்தின் உடன்படிக்கை நம்மோடு நிலைத்திருக்கும் என்றும் விசுவாசித்து நம்பிக்கையோடு பேசி ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்வோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தி னாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் [எபேசி. 1:3] ஆமென்.

# தேவனுடைய கரத்தில் வைத்து விடுங்கள்



***Betty Tucker***

**பொ**துவான ஆராதனையில் பின்வரும் எளிய வார்த்தைகளால் தன் ஜெபத்தை முடித்த ஒரு சீன சகோதரனை நான் நினைவு கூறுகிறேன். " நாங்கள் எல்லாவற்றையும் உங்கள் கரங்களில் வைக்கிறோம் ". நிச்சயமாக இப்படிப்பட்ட ஜெபத்தில் தேவன் பிரியப் படுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

இது தேவனை நாம் நம் எஜமானென்றும், இப்பிரபஞ்சத்தை ஆளுகிறவரென்றும் ஒத்துக்கொள்வதையே அடையாளப்படுத்துகிறது. அவர் நட்சத்திரங்களை அதன் சுற்றுப்பாதையில் நிலைத்திருக்கச் செய்யும் வல்லமை பெற்றிருப்பதால் இவ்வுலகமானது பூரணமாக இயங்கிக் கொண்டிருக்கிறது [யோபு. 26:7].

எனவே, நம்முடைய சில விவகாரங்களை அவரால் எளிதாக வழி நடத்த முடியும், ஆகவே, இறுதியில் *சகலமும் நம் நன்மைக்கேதுவாக நடக்கிறது....* [ரோமர் 8:28]. அதனால் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளினால் வியாகுலப்படுவதால் நம் நேரத்தை ஏன் செலவிட வேண்டும்?

**எல்லாவற்றையும் தேவனிடத்தில் விட்டுவிட குறிப்பான தருணங்கள்**

1. நம் நண்பர்கள் நம்மைக் கைவிடும் போது அல்லது நம்மை காட்டிக் கொடுக்கும் போது நம்மை ஒருபோதும் கைவிடாத நண்பர் நமக்குண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் [1 சாமு. 12:22].

2. நம் தேவைகள் சந்திக்கப்பட எப்போதுமிருக்கின்ற பணப்பற்றாக் குறையால் நாம் சிரமப்படும் போது, நாம் பராமரிக்கப்பட நம்மால் தேவனை நோக்கிப் பார்க்க முடியும். காட்டு புஷ்பங்களுக்கு அவர் உடைகளை உடுத்தும்போது [லூக். 12: 27,28], அவருடைய பிள்ளைகளாகிய நம் தேவைகளை சந்திக்காமலிருப்பாரா?

3. வாழ்க்கை பரபரப்பாக மாறி சூழ்நிலைகள் நம்மை அழுத்தும் போது, *நாம் அமைதியாக அமர்ந்திருந்து அவரே தேவனென்று அறிந்து கொள்ளலாம்.* [சங். 46:10].

4. நாம் மிக மோசமான வியாதியையோ, மரணத்தையோ எதிர்கொள்ளும் போது, நம்பிக்கையுடன் பரலோகத்தை நோக்கிப்பார்த்து நாம் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியிலும் பாதுகாப்பாக நடத்தப்பட நம்மை உண்டாக்கினவர் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும் [சங். 23].

எரேமியா தீர்க்கதரிசி நம் பரம தகப்பனிடமிருந்து ஓர் அருமையான வாக்குத்தத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார். அது இன்றும் நன்றாகவே இருக்கிது. "*என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்*" [எரே. 33:3].

1 பேதுரு 3:12யை வாசியுங்கள். அதில் அநேகமாக நாம் இரண்டாவது வாக்கியத்தை எப்படியோ தவற விட்டு விடுகிறோம் என்பது போல் தான் தெரிகிறது. ...*அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது.* நீதிமான்களின் ஜெபத்தைத் தேவன் கேட்கிறார் என்பதை அறிந்து கொள்வது ஆறுதலாக இருக்கிற தல்லவா?.

இதே விதமாக தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை ஏசா. 65:24ல் நாம் காண முடியும். இந்த வார்த்தை களைக் கேட்ட போது அந்த வயதான தீர்க்கதரிசியின் இருதயம் எப்படி யாக பரவசமடைந்திருக்கும். ....அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போது நான் கேட்பேன். தேவன் தம்முடைய ஜனங்களின் தேவைகளையும் விருப்பத் தையும் அறிந்திருக்கிறார். நாம் ஜெபித்து முடிப்பதற்கு முன்பாகவே அவர் பதிலளிக்க ஆரம்பித்து விடுகிறார்.

**தேவன் எப்படி பதில் அளிக்கிறார்?**

சில வேளைகளில் தேவன் நம் விண்ணபங்களுக்கு "ஆம்" என்று பதிலளிக்கிறார். சாலொமோன் ஞானத்தைக் கேட்டார் [2 ராஜா. 1:10]. தேவன் அந்த விண்ணப்பத்திற்கு பதில் அளித்து ஐசுவரியத்தையும், கனத்தையும் சாலொமோன் மீது குவித்தார். அப்படிப்பட்ட ஞானம்

அதற்கு முன்பு யாருக்குமிருந்ததில்லை. அதற்கு சமமான ஞானமும் இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவில்லை.

சில வேளைகளில் தேவன் நம் விண்ணப்பங்களுக்கு "இல்லை" என்று சொல்லிவிடுகிறார். பவுல் பரிசுத்தமும், தேவ பக்தியும் நிறைந்த விசுவாசியாக இருந்தார். அவர் தன் சரீரத்திலிருந்த முள்ளினிமித்தம் அதை நீக்கிப்போடும்படி தேவனிடத்தில் மூன்று முறை ஜெபித்தார் [2 கொரி. 12: 7,8]. தேவன் இல்லை என்று சொன்னபோது இந்த அன்பான சிலுவையின் போர்ச்சேவகருடைய மனப்பான்மையைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுகிறோம். வசனம் 9,10ல் அவர் இவ்விதமாகச் சொல்ல நாம் கேட்கிறோம். இந்த பெலவீனங்களினால், நான் பலமுள்ளவனாக வளர்ந்தால், இன்னும் நான் பலமாக வளரும்படி, அதிகமான முட்களை எனக்குத்தாரும். உங்கள் விசுவாசம் நிரூபிக்கப்படும்படி, அதிகமான சோதனைகளுக்காக, உபத்திரவங்களுக்காக எப்போது ஜெபித்தீர்கள்?.

அதன் பின்பு, தேவன் "காத்திரு" என்று சொல்லும் நேரங்களுமுண்டு. வழக்கமாக நம் மனதுக்குள் வரும் முதல் உதாரணம் மோசே தான். மோசே வாலிபனாக இருந்த போதே ஜனங்களை எகிப்திலிருந்து விடுவிக்க விரும்பினார். தேவனுடைய பராமரிப்பு மூலமாக, அவர் மலைகளுக்கு ஓடும்படி நிர்பந்திக்கப்பட்டார். அங்கே அவர் ஆடுகளை மேய்த்துக் கொண்டு இடையனுடைய ஏகாந்த வாழ்க்கை வாழ்ந்தார். மோசேக்கு இன்னும் வயதாக வேண்டும், அவர் இன்னும் வளர வேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஒரு நாள் தேவன் எரிகிற முட்செடியிலிருந்து மோசேயிடம் பேசினார். பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை வழி நடத்த இந்த வயதான மேய்ப்பனுக்கு சரியான நேரம் வந்து விட்டது. மோசே நாற்பது வருஷம் காத்திருந்தார், இப்போது ஆயத்தமாகிவிட்டார்!

வேதாகமத்தில் நாம் அதிகமாக ஜெபத்தைப் பற்றி கற்றுக் கொள்ளுகிறோம். 1தெச. 5:17ல் *இடைவிடாமல் நாம் ஜெபிக்க வேண்டுமென்று* புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம். நாம் விரும்பும் போதெல்லாம் தேவனுடைய சிங்காசனத்தைக் கிட்டிச் சேரும் சிலாக்கியம் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட அருமையான காரியமாகும்.

உங்கள் சொந்த ஜீவியத்திலே பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் சம்மந்தமாக அநேக உதாரணங்களை மேற்கோள் காட்ட முடியும். நீங்கள் விண்ணப்பம் *பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிற தில்லை* என்று யாக்கோபு சொல்கிறார் [யாக், 4:2].

இந்த பரபரப்பான இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது மிகவும் சுலபமான அணுகுமுறையாக இருக்கிறது. ஆனால், நம் தேவைகள் சந்திக்கப்பட தேவனிடத்தில் ஊக்கமாக ஜெபிக்க அந்த சீன சகோதரனிடமிருந்து கற்றுக் கொண்டு, அதன் பிறகு எல்லாவற்றையும் அவருடைய கரங்களில் வைத்துவிடலாம். அப்போது நம் பாரங்கள் நீக்கப்பட்டு, நம் காயங்கள் ஆற்றப்படும்.

# எல்லா சபையும் ஒன்று தானா?

### *Dalton Key*

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த போது "*...நான் என் சபையைக் கட்டுவேன்...*" என்று சொன்னார் (மத். 16:18). அவர் எதைக் கட்ட ஆர்வம் கொண்டிருந்தார்?

கர்த்தர் ஒரு மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தை ஸ்தாபிக்க திட்டமிட்டிருந்தாரா? இல்லை. பிரிவு என்பதன் விளக்கம், ஒரு பெரிய தொகையில் சிறிய பங்காயிருக்கிறது. நம்மைச் சுற்றிலும் பெரிய எண்ணிக்கையில் மார்க்கப் பிரிவினை சபைகள் உள்ளன. அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்துவுக்கு விசுவாசமாக, உண்மையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் கிறிஸ்தவர்களின் உலகளாவிய அமைப்பில் ஒரு சிறு கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் விசேஷித்த உபதேசங்களால், நடைமுறைகளால் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். கிறிஸ்து தாம் சபையைக் கட்டுவதாகச் சொன்னபோது மார்க்கப் பிரிவினை சிந்தையோடே வாக்குத்தத்தம் பண்ணவில்லை. அவர் கட்டத் திட்டமிருந்தது, மீட்கப்பட்ட ஜனங்களின் முழுத் தொகையிலிருந்து ஒரு பகுதியை அல்ல. அது, முழுமையானதாகவே இருந்தது. லூக்காவால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு வந்தார்கள் (அப். 2:47). இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாரும் சபையில் இருந்திருந்தால், சபையானது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனதாக இருந்தால், சபை ஒரு முழுத்தொகையில் ஒரு பங்காக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டிருக்காது.

இல்லை, இயேசு தாம் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த சபை, கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டு, சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவுக்கு தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்த மக்களின் அமைப்பாயிருக்கிறது. ஏனென்றால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்க்கப்படுகிறார்கள், ஒரே சரீரம் தான் இருக்கிறது (எபே. 4:4). எங்கெல்லாம், எப்போதெல்லாம் தேவனுடைய கிருபையால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெறும் பரிசுத்தவான்கள் காணப்படுகிறார்களோ, அங்கே சபையும்

காணப்படும். கிறிஸ்துவின் தலைமைத்துவத்தின் கீழ் செயல்படும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, அதன் பணி சம்மந்தமாகவும், இருக்கிறது (எபே. 4:4). எங்கெல்லாம், எப்போதெல்லாம் தேவனுடைய கிருபையால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெறும் பரிசுத்தவான்கள் காணப்படுகிறார்களோ, அங்கே சபையும் காணப்படும். கிறிஸ்துவின் தலைமைத்துவத்தின் கீழ் செயல்படும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, அதன் பணி சம்மந்தமாகவும், ஆராதனை சம்மந்தமாகவும் தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (எபே. 5: 24; கொலோ. 3:17). இயேசு கட்டின சபை ஒருமைத் தன்மை கொண்டது. அது அவருக்கு மட்டுமே உரியது.

இந்த உண்மைகளின் அடிப்படையில், " எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று எப்படி ஒருவரால் சொல்ல முடியும்? "

## நாம் மறந்து விட்டோமா?

### ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கர்களைப் பற்றிச் சொன்னது?

" நாம் வானத்தின் மிகச் சிறந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டு வருகிறோம், நாம் எந்த ஒரு தேசமும் ஒருபோதும் வளர்ந்திராத அளவுக்கு எண்ணிக்கையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால், நாம தேவனை மறந்துவிட்டோம். நாம் நம்மை சமாதானத்தோடு பாதுகாத்து, நம்மைப் பெருகச் செய்து, வளமாக்கிப் பலப்படுத்திய கிருபையுள்ள கரத்தை மறந்துவிட்டோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய மேலான அறிவினால் உண்டானதென்று வஞ்சனையுள்ள இருதயங்களில் வீணாக கற்பனை செய்துவிட்டோம். வெற்றிப் போதையில் மிகவும் தன்னிறைவு அடைந்து மீட்கும் மற்றும் பாதுகாக்கும் கிருபையின் அவசியத்தை உணராமல், நம்மை உண்டாக்கின தேவனிடத்தில் ஜெபிக்கப் பெருமையுள்ளவர்களாயிருக்கிறோம் ".

# விசுவாசத்தை ஊன்ற கட்டுங்கள்

**Bro. தானியேல் துரைராஜன்**

## பார்வையற்ற இரண்டு பேர்....

இன்றைய நாளில் அநேகர் தோன்றியுள்ளனர். ஆனால், வாழவில்லை.

கிறிஸ்தவனிடத்தில் ஆண்டவர் எதிர்பார்த்த விசுவாசமில்லை இன்றைக்கு

**அற்ப விசுவாசம் அலைக்கழிக்கும் விசுவாசம், ஆணவ விசுவாசம், அவிசுவாசம், அசுத்த விசுவாசம்.**

இப்படிப்பட்ட கும்பல் இன்றைய கிறிஸ்தவத்தில் பெருகு கிறதேயொழிய கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் நாளுக்கு நாள் குறைவுபட்டு வருகிறது.

ஒரு காலகட்டத்தில் அப்போஸ்தலர்களுக்கு இந்த அவலம் நேரிட்டது.

அவர்கள் ஆண்டவரைப் பார்த்து வேண்டினார்கள் [லூக். 17:5].

எங்கள் விசுவாசத்தை வாதிக்கப்பண்ண வேண்டும் என்று. ஒரே ஒரு வாழ்க்கை உனக்குண்டு நீ இயேசுவுக்காய் என்ன செய்கிறாயோ அதுவே நித்தியமானது.

## அவிசுவாசமுள்ள வாழ்க்கை!

**விசுவாசத்தை புரிந்துகொள்ளுங்கள்**

### I விசுவாசம் தனிப்பட்டது :-

மனைவிக்காக கணவனோ கணவனுக்காக மனைவியோ, பிள்ளைகளோ விசுவாசிக்க முடியாது. விசுவாசத்தை யாரும் சுதந்தரிக்கவும் முடியாது.

### II விசுவாசம் சான்றுகளினாலானது

எங்கு ஆதாரபூர்வமான சான்று இல்லையே அங்கே விசுவாச மில்லை.

சான்றுகளால் உறுதியாக்கப்பட்ட பரிசுத்தவேதாகமம் எங்கு இல்லையோ அங்கு விசுவாசமில்லை.

## III விசுவாசம் இரண்டு காரியங்களையுடையது

**நம்பிக்கை**

**கீழ்ப்படிதல்**

**a. நம்பிக்கை :** சங். 37:3 கர்த்தரை நம்பி நன்மை செய்

**நீதி. 3:5,6 :** உன் சுயபுத்தியை சாராதே கர்த்தர் பேரில் நம்பிக்கையாயிரு. வழிகளை அவருக்கே ஒப்பு கொடு. அப்பொழுது காரியங்கள் வாய்க்கப் பெறும்.

**ஏசாயா 50:10** உங்களின் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக்கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறனோ அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி தன் தேவனைச் சார்ந்து கொள்ளக்கடவன்.

## நீ கர்த்தரையே நம்பு! மனுஷனை நம்பாதே!

சங். 118:8 மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்!

நம்முடைய தேவன் வாக்குத்தத்தங்களின் தேவன் கர்த்தரை நம்புகிறவர் களுக்கு என்ன வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார்?

சங். 31:19 : உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கும் முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது.

சங். 32:10 : துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்.

சங். 34:22 கர்த்தர் தமது மக்களின் ஆத்துமாவை மீட்டுக் கொள்ளுகிறார். அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது.

சங். 125:1 கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்.

**[நாகூம் 1 : 7]**

கர்த்தர் நல்லவர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.

**வேதாகம உதாரணங்கள் :**

1. 2 ராஜா 18:5 எசேக்கியா ராஜா

21 வயதில் ராஜா 29 வருடம் ஆட்சி. தன் தகப்பனைப் போல கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான். தாயின் பெயர் ஆபி

அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்து போட்டான்; அந்நாட்கள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர். அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள். அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான்.

## இதையெல்லாம் எதைக் கொண்டு செய்தான்?

அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே அவனுக்கு பின்னும், அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை.

யோபு 13:5 யோபு சொல்லுகிறார்

அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்.

1 தீமோத். 4:10 : பவுல் சொல்வது

இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம் நிந்தையும் அடைகிறோம். ஏனெனில், எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

தாவீது சொல்லுகிறார் [சங். 31:24]

கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பவர்களே திடமானதாயிருங்கள். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

கிறிஸ்தவனுக்கு வாழ்வதற்கு நிறைய இருக்கிறது. ஆனால், அதுவே நம்பிக்கையற்ற நிலையில் தள்ளாடினால் தோல்விதான். நம்முடைய சாட்சியை இழந்து உலகத்திற்கு முன்பாக ஒரு பரியாச சின்னமாகிவிடுவோம். ஜாக்கிரதை!

கீழ்ப்படிதல் : விசுவாசம் கீழ்ப்படிதலினால் பூரணப்படும்.

கசப்பானதாக இருந்தாலும் மிகவும் ஆபத்தானதாக இருந்தாலும் கீழ்ப்படிய தான் வேண்டும்.

ஆபிரகாம் : மகனை பலி கேட்ட போது

எபி. 11:7 அவன் ஒப்புக்கொடுத்தான்.

ஆபத்தானது சிவந்த சமுத்திரத்தை கடந்து போனது

எபி. 11:29 : ஆனால், இன்றைக்கு தேவன் நம்மிடத்தில் கசப்பான கட்டளையோ, ஆபத்தான கட்டளையோ கொடுக்காமல் நம்மை காப்பாற்றும் ஒரு கட்டளையை கொடுத்திருக்கிறார்.

பாவ அழிவிலிருந்து மரணத்தின் ஆதிக்கத்திலிருந்து தண்டனையிலிருந்து காப்பாற்றும் கட்டளை.


மாற்கு 16:15,16 விசுவாசமுள்ளவனாக திருமுழுக்கு பெற்றவனே காப்பாற்றப்படுவான். அப்படியில்லாதவன் அழிவின் தண்டனையை பெற்றுக்கொள்வான்.

**நிறைவாக : வாசித்து முடிப்போம்**

**ரோமர் 5:1,3,4,5**

நன்றி!!

## புதிய வெளியீடு



**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**World Evangelism Gospel Media**



### Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 pm
Every Saturday 7:15-7:30 am
} Contact : 98427 30382

### Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

### Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

### P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

### P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



### Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)

### Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014

## எங்களது இதர வெளியீடுகள்



சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**

**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு . இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.